www.Padasalai.Net www.CBSEtips.in

7616
M.P.Monika

# A முதல் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்:60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ________
   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
2. ஒலியின் வரிவடிவம் ________ ஆகும்.
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு
3. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம்
   இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம்
4. 'கல்+அளை' – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) கல்லளை ஆ) கல் அளை இ) கலலளை ஈ) கல்லுளை
5. யாண்டு என்னும் சொல்லின் பொருள் ________
   அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

**கோடிட்ட இடங்களை நிரப்புக** 3x1=3

6. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு என்று அழைக்கப்படும் விலங்கு ________
7. வேட்கை என்னும் சொல்லில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ________
8. போலி ________ வகைப்படும்.

**பொருத்துக** 3x1=3

9. பொக்கிஷம் – மிகுதி
10. சிங்காரம் – செல்வம்
11. சாஸ்தி – அழகு

**II கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும் 5x2=10**

12. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
13. பேச்சுமொழி என்றால் என்ன?
14. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
15. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
16. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?
17. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?
18. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?

Scanned with ACE Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



III. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும் 3x3=9

19. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?
20. பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை எழுதுக.
21. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?
22. புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.
23. பாஞ்சாலக்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும் ?

IV அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

24. "அருள்நெறி ......... அன்பறமே" என முடியும் பாடலை எழுதுக.
25. வாய்மை எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

V கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்கவும் 2x2=4

26. குற்றியலிகரம் என்றால் என்ன ?
27. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும் ?
28. தகுதி வழக்கின் வகைகள் யாவை ?

VI அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 5x2=10

29. கலைச்சொல் தருக
அ) Island ஆ) Sacrifice
30. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக
அ) மாணவன் x ஆ) அரசன் x
31. தொகைச்சொற்களை விரித்து எழுதுக.
அ) முத்தமிழ் ஆ) இருதிணை
32. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகள் (பழமொழிகள்) ஏதேனும் ஒன்று எழுதுக.
33. பிழையைத் திருத்தி சரியாக எழுதுக
அ) கோவலன் சிலம்பு விற்கப் போனாள்
ஆ) பசு கன்றை ஈன்றன.

VII பத்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக 1x5=5

34. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார் ?

*(அல்லது)*

வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

35. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக. 1x5=5

*(அல்லது)*

"நான் விரும்பும் தலைவர்" – கட்டுரை எழுதுக.

-----

www.Padasalai.Net

Scanned with ACE Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com